RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt22s16

OPEN ACCESS

# பாணர்களின் வாழ்வியல் பண்பாட்டுப் படிமலர்ச்சி

**பி. ஸ்ரீதேவி** [அ, *]

[அ] தமிழ்த்துறை, ஸ்ரீ எஸ். ராமசாமி நாயுடு ஞாபகார்த்த கல்லூரி, சாத்தூர்-626203, தமிழ்நாடு, இந்தியா.

# Biographical and Cultural Evolution of Paanar

**P. Sridevi** [a, *]

[a] Department of Tamil, S. Ramasamy Naidu Memorial College, Sattur–626203, Tamil Nadu, India.

* Corresponding Author: srivenki2000@gmail.com

Received: 23-03-2021
Revised: 26-11-2021
Accepted: 29-11-2021
Published: 24-01-2022

Check for updates

## ABSTRACT

Tamil literary tradition registers 'tinai' divisions which is "a language with in a language" comments A.K. Ramanujan as it provides infinite possibilities to create in a finite frame. Along with people in respective landscapes, there are a nomadic group of paanar who visited all five landscapes spreading the oral tradition. References about the paanar, their oral tradition and nomadic lifestyle are found in cankam literature. There are different kinds of paanar referred performers, singers, declaimers, kuttar, viraliyar, poribar and panar along with their female counterparts and characteristic instruments. Records correspond that they were nomadic and visited kings to sing their praise and receive gifts. Their female counterparts were called 'viraliyar'. The Bard community depended on Kings and patrons for their livelihood. They are also called as 'isai panar' or musical paanar. They are further classified into three 'isai panar', 'yazh panar' and 'mandai panar'. This classification is also considered as separate caste by some and separate sect by others. These three sects of paanar are the ancestors of paanar. This research paper intends to study whether this nomadic lifestyle, singing the praise of kings, depending on kings' gifts for livelihood gave the paanar contentment in life from anthropological perspective.

**Keywords:** Paanar, Viraliyar, Ethnicity, Poverty, Cultural Evolution, Nomads.

## முன்னுரை

பண்டைக்காலத் தமிழ்ச் சமூகத்தை வெளிச்சப் படுத்திக்காட்டும் சங்கஇலக்கியத்தில், பாணர்கள் எனும் இனக்குழு மக்களின் வாழ்வு பெரும் பங்கு வகிக்கின்றது. அவர்களின் பணியே கலைப்பணிதான் என்னும் அளவிற்கு முழுமுனைப்பாகத் தங்களைப் பண்பாடுதல், இசைக்கருவிகள் வாசித்தல் போன்ற செயல்களில் ஈடுபடுத்திக் கொண்டவர்கள். பாண் சமூகத்தினர் சங்ககால வாழ்வியலில் தனிப்பெரும் இடத்தினை வகிக்கிறார்கள். யாழ் கொண்டு மீட்டிப் பாட்டிசைக்கும் இவர்கள் நாடோடிக் கலைஞர்கள் எனவும் சுட்டப்படுகின்றனர். மன்னர்கள், குறுநில மன்னர்கள், வீரர்களைப் புகழ்ந்து பாடி, தம் வறுமைநிலையைப் போக்கிக் கொண்டவர்கள் என்றே இலக்கியச் சான்றுகள் யாவும் இவர்களைப் படம் பிடித்துக் காட்டுகிறது. அவர்களின் வாழ்வியல் பண்பாட்டுப் படிமலர்ச்சி குறித்து இக்கட்டுரையில் காண்போம்.

## பண்பாட்டுப் படிமலர்ச்சி

"பண்பாட்டுப் படிமலர்ச்சி என்பது தொடர்ச்சியான ஏறுமுக வளர்ச்சியைக் கொண்டிருக்கவில்லை பேரரசுகள் சிதைந்து குட்டி இனத் தலைமை அரசுகளாகவும், கப்பம் கட்டும் அரசுகளாகவும், மீண்டும் பேரரசுகள் ஆகவும், போரின் இடப்பெயர்வால் முந்தைய நல்ல நிலையிலிருந்து கீழான நிலையை அடைந்த நிகழ்வுகள் பல நடந்தன. பல இனங்கள் ஒரு காலத்தில் வேளாண் தொழிலில் ஈடுபட்டு பின்னர் அரசியல் படையெடுப்புகளால் நாடோடிகளாக மாறிய நிலையை காணமுடிகிறது" (Monaghan & Just, 2000; Monaghan & Just, 2013). ஆயின், பாணர்கள் என்ற ஒரு இனக்குழு உருவாவதற்கான காரணம், அவர்களின் வாழ்க்கையில் அது எந்த அளவில் இன்பத்தைத் தந்தது. அவர்கள் வேளாண் குடிகளாக வாழ்ந்து பின் நாடோடிகளாக திரிந்தவர்களா, இல்லை ஆரம்ப காலகட்டத்தில் இருந்து நாடோடிகளாக வாழ்வதற்கே அவர்கள் ஆசைப் பட்டார்களா, என்பதும் நோக்கத்தக்கதாக அமைந்துள்ளது.

இன்று தமிழகத்தில் வாழும் நரிக்குறவர்கள், சாமக்கோடங்கிகளான குடுகுடுப்பை நாயக்கர்கள் முறையே குஜராத், ஆந்திரப் பகுதிகளில் இருந்து வந்தவர்கள். இவர்கள் அங்கு வேளாண் குடிகளாக வாழ்ந்தவர்கள். முஸ்லிம் படையெடுப்பினால் இடம்பெயரத் தொடங்கிய இவர்கள் இறுதியில் நாடோடிகளாக மாறிவிட்டனர். இவ்வாறு இன்னும் பல நாடோடிகள் ஒருகாலத்தில் பூர்வீக இடங்களில் வேளாண் குடிகளாக இருந்தவர்களே. ஆக பண்பாட்டுப் படிமலர்ச்சி யில் ஏறுமுகப் பாதையிலிருந்து பின்நோக்கி சரிந்து விட்டப் பண்பாடுகள் பல உள்ளன (Bhaktavachala Bharathi, 2005). ஆதலால் பாணர்கள் குறுநில மன்னர்களாக இருந்து பின்னர் நாடோடிகளாக மாறி இருக்கலாம் என்ற யூகமும் சிந்தித்தற்க்குரியது.

## ஆற்றுப்படை நூல்களும் பாணர்களும்

தொல்காப்பியம் ஆற்றுப்படுத்தலுக்கு ஒரு இலக்கணத்தை வகுத்துள்ளது அதிலேயே யார் யாரை ஆற்று படுத்துவார் எனும்போது அதில் கூத்தர், பாணர், பொருநர், விறலி என்று அவர்களை மட்டுமே சுற்றிச் செல்வதாக இப்பாடல் அமைந்துள்ளது ஒரு காலகட்டத்தில் நாடோடிகளாக வாழ்ந்து திரிந்த ஒரு சமூகத்தின் நிலையைப் பிரதிபலிப்பதாக இலக்கணம் வகுக்கப்பட்டுள்ளது அவர்களுக்கு பாணர்சேரி என்கின்ற குடியிருப்பு இருந்தாலும் அதில் நிலையாக வாழ்ந்ததாகக் குறிப்புகள் நிறைய காணக்கிடைக்கவில்லை.

"கூத்தரும் பாணரும் பொருநரும் விறலியும்

ஆற்றிடைக் காட்சி உறழத் தோன்றிப்

பெற்ற பெருவளம் பெறாஅர்க்கு அறிவுறீஇச்

சென்று பயனெதிரச் சொன்ன பக்கமும்"

ஆற்றுப்படை நூல்கள் யாவும் பாணர்களின் வாழ்வியலைத் துல்லியமாகப் படம்பிடித்துக் காட்டக் கூடிய இலக்கியங்கள் பாணர்கள் தங்களைப் போன்றே வறுமையில் வாடக் கூடிய இசைக்கலைஞர்கள் வெளிப்படுத்துவதாக அமைந்தது ஆற்றுப்படை இலக்கியம் எங்கு போனால் பொருளும் உணவும் ஆடையும் கிடைக்கும் என்று வறுமையில் வாடிய ஒருவன் அதனைப் பெற்று மகிழ்வுடன் இருந்து பின் மற்றொருவனை ஆற்றுப்படுத்தக்கூடியது (Ilankumaranar, 2018). உண்மையில் அந்த நேரத்தில் அவர்களின் மகிழ்ச்சி இருந்திருந்தாலும் இதுபோல் நாடோடியாகச் சுற்றித் திரிவது அவர்களுக்கு மன வருத்தத்தை ஏற்படுத்தி இருப்பது இலக்கியங்களில் பதிவுகளாகக் காணக்கிடைக்கின்றன.

## பாணர்கள் குறுநில மன்னர்கள்

பாணர்கள் ஒரு காலத்தில் குறுநில மன்னர்களாக இருந்து வந்தவர்கள் என்பதற்குச் சான்றுகள் கிடைத்துள்ளன. சித்தூரின் மேற்கே பழைய வடாற்காடு மாவட்டத்தின் வடமேற்கு, கர்நாடக மாநிலத்தின் கோலார் பகுதியின் கிழக்கு, தகடூர் பகுதியின் சில பகுதிகள், பழைய தென்னாற்காடு மாவட்டத்தின் சில பகுதிகள் பாணர் ஆட்சியின் கீழ் இருந்தன. இப்பகுதிகளில் பாணர்களின் கல்வெட்டுகள் காணப்படுகின்றன (Krishnamurthy, 2004). வேலூர் மாவட்டத்திலுள்ள திருவல்லத்தைத் தலைமையிடமாகக் கொண்டு பாணர்கள் ஆட்சி புரிந்ததாகவும், குறுநில மன்னராக வாழ்ந்து வந்ததாகவும் சான்றுகள் கிடைத்துள்ளன. பல்லவ மன்னர்கள் கொண்டிருந்த நந்தி சின்னத்தையே இவர்களின் சின்னமாகவும் கொண்டு ஆட்சி புரிந்து வந்துள்ளனர் என்கின்ற செய்தியும் கிடைக்கப்பெற்றுள்ளது. குறுநில மன்னர்களாக வாழ்ந்து வந்தவர்கள் ஒரு காலத்தில் தாங்கள் வசிப்பதற்கு நல்ல வீடு இல்லாது உண்பதற்கு நல்ல உணவு இல்லாதவர்களாக, நாடோடிகளாக மன்னர்களைப் புகழ்ந்து பாடக்கூடிய நிலை வரும்பொழுது அவர்களின் வாழ்வு எத்தகையதொரு உணர்வு வேறுபாட்டைத் தந்திருக்கும் (Kiruttinasamy, 2005). இன்றைய காலகட்டத்தில் மக்கள் தாங்கள் இருக்கும் இடம் இல்லாது நாடோடிகளாக வேறு இடத்தில் புலம்பெயர்ந்து வாழ்வது எத்தனை வேதனைக் குரியதென்று கூறுகிறோமோ அத்தனை வேதனையும் அன்றைய காலகட்டங்களில் பாணர்களிடமும் இருந்திருக்கலாம் (Ramakrishnan, 2008).

இந்நாள் திறவாக் கண்ண சாய்செவிக் குருளை கறவாப்

பால்முலை கவர்தல் நோனாது, புனிற்றுநாய் குரைக்கும் புல்லென்

அட்டில் கால்சோர், முதுசுவர்க் கணச் சிதல் அரித்த, பூழி பூத்த

புழல்காளாம்பி

ஒல்குபசி உழந்த ஒடுங்குநுண் மருங்குல், வளைக்கை, கிணைமகள்

வள்உகிர்க் குறத்த

குப்பை வேலை உப்புஇலி வெந்ததை, மடவோர் காட்சி நாணி,

கடைஅடைத்து, இரும்பேர் ஒக்கலொடு ஒருங்குடன் மிசையும்

அழிபசி வருத்தம் வீட"

இவ்வரிகள் அப்படியே பாணர்களின் வாழ்வினை படம் பிடித்துக் காட்டுவதாக அமைந்துள்ளது (Pushparaj, 2018). அவர்களின் வீடு அடுக்களை கூரையிலிருந்து விளக்கக்கூடிய கழிகள். சுவரில் கரையான் அரித்து காளான் பூத்துக் கிடக்கக்கூடிய தன்மை. இளைத்த உடலை உடைய கிணை மகள், அவள் கிணைப் பறையைப் பயன்படுத்தக்கூடியப் பாணனின் மனைவி விறலி. கடும் பசியோடுக் குப்பைக் கீரையை எடுத்துவந்து அதனை சுவை கூட்டுவதற்கு உப்பு கூட இல்லாது கீரையை சமைத்து அதை உண்பதை அடுத்தவர் கண்டால் எள்ளி நகையாடுவரர்கள் என்பதற்காக கதவடைத்து அவர்கள் உண்ணக்கூடிய காட்சி உண்மையில் வேதனையைத் தருவதாகக் காட்டப்பட்டுள்ளது. இத்தகைய வறுமை எங்களிடம் இருந்தது அது தீர்வதற்காக உன்னிடம் வந்தோம் எனக் கூறிப் பரிசில் கேட்பது பாணர்களின் நிலையாகக் காட்டப்பட்டுள்ளது. மன்னராக இருந்து தன் மூதாதையர்களின் வழியிலிருந்து வெளிவந்து நாடோடிகளாகத் திரியும் புலம்பெயர் வாழ்வில் அவர்கள் அனுபவித்தத் தன்மை இங்கே வெளிப்படுகிறது. பண்பாட்டு படிமலர்ச்சி யில் ஏறுமுகப் பாதையில் இருந்து பின்னோக்கி சரிந்து விட்டப் பண்பாடுகள் பல உள்ளன. "தனித்தன்மை வாய்ந்த திணைக்கோட்பாடு உலகிற்கு வழங்கிய பாணர்கள் தமிழகத்தின் தொல்குடியினர். இவர்களின் வசிப்பிடம் பாண்சேரி, பாண்குடி எனப்பட்டது. இவர்கள் இசையை வாழ்வாகக் கொண்டவர்கள். கூடி வாழும் இயல்பு கொண்ட குழு மனத்தவர். குழுவாகச் சென்று மக்களை மகிழ்வித்தார்கள். இக்குழுவில் பாடினி, விறலி, கூத்தர் இடம்பெறுவதுண்டு. இனக்குழு சமுதாயத்தின் பொதுமை வாழ்வு இவர்களுக்கு உரியது. நிலவுடைமைச் சமுதாயத்தின் மறுமை வாழ்வுக்கு தள்ளப்பட்டவர்கள் என்ற கருத்தும் இங்கு நோக்கத்தக்கது.

"வெந்தேறற் கனலியோடு மதிவளந்திரிதரும்

தண்கடல் வரைப்பில் தாங்குதல் பொறாது

பொழிமழை துறந்த புகைவேய் குன்றத்துப்

பழுமரந் தேடும் பறவைப் போலக்

கல்லென் சுற்றமொடு கால்கிளர்ந்து திரிதரும்

புல்லென் யாக்கைப் புலவாய்ப் பாண".

கடந்து செல்லும் பாதையில் வெம்மையும் பொருட்படுத்தாதுப் புரவலரைத் தேடிப் புறப்பட்டப் பாணர்களின் வறுமை முதிர்வு (Kathir Murugu, 2009). வெயிலின் வெப்பத்தைக் காட்டிலும் கொடுமையானது என்பர் உரையாசிரியர். இனக்குழு சமுதாயத்தில் ஒரு சாரார் மட்டும் அழுது புலம்பித் திரியும் சுற்றத்துடன் ஓரிடத்திலிருந்து வாழக்கூடிய வாழ்க்கை இல்லாமல் ஓடித்திரியும் வாழ்க்கையை வாழ்வது அவர்களின் பண்பாட்டு படிமலர்ச்சியினைக் காட்டுவதாய் அமைந்துள்ளது. நன்றாக வாழ்ந்து பின்னர் வீழ்ந்த கதை இவர்களது கதை. பொலிவிழந்த வடிவினை உடையவர்கள். இதில் 'புலவு வாய்ப் பாண' என்பதில் மாமிச வாடை வீசக்கூடிய வாயை உடையவர் என்பதுதான் பொருளாக இருந்திருக்கலாம். ஆயின் உரையாசிரியர்கள் அதன் பொருள் கொண்டு கற்ற கல்வியை விரித்துரைக்கும் என்பது. இன்றைய காலகட்டத்தில் நாம் கண்கூடாகப் பார்க்கக் கூடிய நிலை விவசாயிகளின் நிலங்களில் அவர்கள் படும் பாடு ஆதிபூர்வகுடிகளாக, நிலக்கிழார்களாக வாழ்ந்து வந்த விவசாயிகள் பஞ்சத்தின் காரணமாக உண்ண எதுவுமின்றி எலியைப் பிடித்துத் தின்றக் கதையும், இறந்து பட்ட கதையும் நாம் கண்கூடாகக் கண்ட உண்மை. இருக்க இடமின்றி, உண்ண உணவின்றி, தங்கும் வீடு இடிபாடுகளுடன் இருந்த நிலையில் கண்ட இடங்களில் கிடைத்த இறந்து போன விலங்குகளை உணவாக அவர்கள் உண்டிருக்கலாம் என்பதே இவ்விடத்தில் பொருந்தி நிற்கும். பாணர்கள் மீன் பிடிக்கக் கூடிய தொழிலை செய்து வந்திருக்கிறார்கள். அவர்களிடம் எப்போதும் மீன் பிடிப்பதற்கு உரிய நீண்ட தூண்டில் கோளும் தூண்டிலில் மாட்டுவதற்கான பச்சை இறைச்சியையும் சேர்த்து ஒரு தோல் பையில் மாட்டி தங்களுடன் எப்பொழுதும் வைத்திருந்தனர் என்கின்ற செய்தி பெரும்பாணாற்றுப்படையில் காணக்கிடைக்கிறது.

"பச்சூன் பெய்த சுவல்பிணி பைந்தோல், கோள்வல், பாண்மகன் தலைவலித்து யாத்த

நெடுங்கழைத் தூண்டில் நடுங்குநாண் கொளீஇ,

இயல்பாக வாழக்கூடிய அவர்களின் வாழ்வியலை காட்டுவதாக இப்பாடல் அமைந்துள்ளது (Kathir Murugu, 2009). ஒரு வழியாக சங்க இலக்கியம் முழுவதுமாக பாணர்களின் பங்கீடு அதிகமாகக் காணப்பட்டிருக்கின்றது. பாடல்கள் பாடி, யாழ் இசைத்ததோடு, தமிழையும் சேர்த்து வளர்த்திருக்கிறார்கள் என்பது கண்கூடு. மேலும் சங்க இலக்கியத் தலைவன் தலைவி இருவருக்குமிடையில் சிறந்ததொரு பாலமாக, அவர்களின் வாழ்க்கையின் புதிய கூறுகளை வளர்ச்சிப் படியில் எடுத்துச் செல்லக்கூடிய முக்கியமான நிலையில் இருந்திருக்கிறார்கள்.

சங்க இலக்கியங்களும் தமிழ்நாடும் பாணர்களுக்கென தனி இடம் தந்துள்ளது. பதினெண் மேல்கணக்கு நூல்களான சிறுபாணாற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை எனும் இலக்கியச் சான்றுகளே இதற்கு ஆதாரம். மேலும் புறநானூறு, அகநானூறு போன்றவற்றிலும் பாணன் கூற்றாகப் பல பாடல்கள் காட்டப்பட்டுள்ளது. பக்தி இலக்கியங்களிலும் கூட சைவத்தில், நாயன்மார்களுள் ஒருவரான திருநீலகண்ட யாழ்ப்பாணரும், ஆழ்வார்களுள் ஒருவரான திருப்பாணாழ்வாரும் பக்தி இயக்கத்திற்கும் தமிழுக்கும் தொண்டு செய்தவர்கள். பாணர்கள் கலைகளுக்கெல்லாம் முன்னோடியாகத் திகழ்ந்தவர்கள் என்றே கூறலாம்.

## முடிவுரை

ஆயின் சிறந்த குடியில் தோன்றிய சிறப்புமிக்க செயல்பாடுகளைக் கொண்டிருந்த பாணர்கள், ஒரு காலத்தில் குறுநில மன்னர்களாக இருந்தவர்கள் என்றும், பின்னர் அவர்களுடைய பேரிழப்பின் காரணமாக

நாடோடிகளாகத் திரிந்து, வாழ்ந்த கதை கண்கூடாக வெளிப்பட்டு நிற்கின்றது. ஆயின் இழந்தவைகளைப் பற்றிய வருத்தம் என்பது ஒரு பக்கம் இருந்தாலும், தாம் நல்ல நிலைமையில் இருந்து இப்படி ஆகிவிட்டோம் என்று புலம்பிய நிலை எங்கும் காணப்படவில்லை. அவர்களின் வாழ்க்கையில் நேரடியாகக் காணக்கூடிய இன்னல்களைப் புலம்பியும், பின் மன்னர்களிடம் அவர்கள் அடையக் கூடிய வெகுமதியினால் கிடைக்கும் மனநிம்மதியையும் அவர்கள் பதிவு செய்துள்ளார்கள். புரவலர்களாக விளங்கிய மன்னர்களின் கொடைத் தன்மையினால் தங்கள் வாழ்வு சிறந்து இருப்பதைக் கூறிச் சென்றாலும், உண்மையில் அவர்களது வாழ்வில் சோகங்கள் தான் நிறைந்திருக்கும் என்பதுவே உண்மை.

## References


Bhaktavachala Bharathi, (2005) Manudaviyal kotpadukal, Adaiyaalam Publishing, Trichy, Tamil Nadu, India.

https://doi.org/10.1093/actrade/9780192853462.001.0001

Ilankumaranar, U.A., (2018) Tolkappiyam – Thelivurai, Fourth Tamil Sangam, Madurai, India.

Kathir Murugu, (2009) Pathupaattu Perumbanaatrupadai Sirubanaatrupadai Moolamum Uraiyum, Saratha Publication, Chennai, India.

Kiruttinasamy, (2005) Pallavar kalakurunila mannargal tamilnadu varalarum, Pallava-Pandiyar kalam, 1st edition, Chennai, India.

Krishnamurthy, S., (2004) Nadukargal, Meyyappan Publishing, Chennai, India.

Monaghan, J., Just, P., (2000) Social and Cultural Anthropology: A Very Short Introduction, Oxford University Press, UK.

Monaghan, J., Just, P., (2013) Social and Cultural Anthropology: A Very Short Introduction, Translated by Bhaktavachala Bharathi, Adaiyaalam Publishing, Trichy, Tamil Nadu, India.

Pushparaj, P., (2018) Pathupaattu Sirubaanaatrupadai Moolamum Uraiyum, Saratha Publication, Chennai, India.

Ramakrishnan, Ira., (2008) Tagadoor varalarum panpadum, Ramaiyaa Publication, Chennai, Tamil Nadu, India.


**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License